20th January 1964]

கனம் திருமதி ஜோதி வெகங்டாசலம் : சென்ற ஆண்டு கேட்டபொழுது கட்டிடம் கொடுப்பதற்கு யாரும் முன்வரவில்லை. அப்படி யாராவது கட்டிடம் கொடுப்பதற்கு முன் வந்தால், கண்டிப்பாக அந்த ஆலோசனையும் மனதில் வைததுக்கொள்ளப்படும்.

திரு. ஜே. மாதா கவுடர் : ஆயுர்வேத வைத்திய முறைக்கு மூலிகைதான் வேண்டும். அதிகமாக மூலிகைகள் நிறைந்த நீலகிரியில் இந்தக் கல்லூரியை ஏற்படுத்தாமல், குற்றாலத்தில் வைப்பதற்கு என்ன காரணம்? இதற்கெல்லாம் 'எக்ஸெப்ட் நீல்கிரிஸ்' என்ற கொள்கையை அரசாங்கம் வைத்துக்கொண்டிருக்கிறதா? (சிரிப்பு.)

கனம் சபாநாயகர் : குற்றாலத்தில் மூலிகைகள் நிறைய இருக்கின்றன. (சிரிப்பு.)

(பதில் இல்லை.)

திருமதி டி. என். அனந்தநாயகி : நாட்டு வைத்தியக் கல்லூரி கீழ்பாக்கத்தில் இருந்தால், அதை மீண்டும் சென்னையிலே ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா? சென்னையிலே ஆரம்பித்தால்தான் துரிதப்படும், எல்லாவிதமான அட்மினிஸ்டிரேடிவ் கன்வீனியன்ஸும் இருக்கும். நடைமுறையில் பார்த்தால் சென்னையில் இந்தக் கல்லூரியை ஆரம்பித்தால்தான் நல்லது என்ற காரணத்தினால், இந்தக் கல்லூரியை கீழ்பாக்கத்திலாவது, அமிஞ்சிகரையிலாவது ஆரம்பிப்பதற்கு முயற்சி செய்வார்களா?

(பதில் இல்லை.)

திரு. கே. பொன்னையா : நாட்டு வைத்தியர்கள் தங்களுடைய முறைகளை வெளியார்களுக்கு சொல்லிக்கொடுப்பதில்லை என்கிறார்கள். நாட்டு வைத்தியர்கள் அந்த முறை தங்கள் குடும்பச் சொத்து என்கிறார்கள். ஆகவே, அந்த நிலைமையில் உள்ளவர்கள் வைத்தியக் கல்லூரியில் வந்து மாணவர்களுக்கு எப்படி சொல்லிக் கொடுக்க முடியும்?

(பதில் இல்லை.)

திரு. கே. எஸ். நடராஜ கவுண்டர் : சித்த வைத்திய முறையிலே இறந்தவரை மீண்டும் உயிர் பெறச் செய்யலாம் என்பது உண்மை தானா? அது அரசாங்கத்திற்குத் தெரியுமா? (சிரிப்பு.)

(பதில் இல்லை.)

பாதாள சாக்கடை அமைப்புத் திட்டம் (திருச்சி)

***50 கேள்வி.—திரு. எம். எஸ். மணி :** கனம் சுகாதார அமைச்சர் தய்வுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருச்சி நகரத்திற்கான பாதாள சாக்கடை அமைப்புத் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : The Government have sanctioned the investigation of a Drainage Project for Tiruchirappalli Municipality in September 1963. The

[20th January 1964

investigation of the scheme will be taken up by the Sanitary Engineering Branch of the Public Health Engineering and Municipal Works Department.

திரு. சி. பொன்னுசாமி : தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுக வேலை மிக வேகமாக நடந்துகொண்டிருக்கிறது. அதனால் அங்கு அதிகப்படியான மக்கள் வந்து சேர்ந்திருக்கிறார்கள். ஆகவே, அங்கே பாதாள சாக்கடை திட்டத்தை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழே எடுத்து நடத்த சர்க்காருக்கு உத்தேசம் உண்டா? அதற்கான உத்தரவை சர்க்கார் பிறப்பித்திருக்கிறார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அந்த ஸ்கீமும் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது.

திருமதி டி. என். அனந்தநாயகி : இம்மாதிரியாக பெரிய முனிசிபாலிடிகளில் பாதாள சாக்கடை இல்லாத காரணத்தினால் பல நோய்கள் பரவுவதால், அரசாங்கத்திடம் பணம் இல்லாவிட்டால் அந்தத் திட்டத்தை தனியார் துறையில் செய்வதற்கு சர்க்கார் ஏதாவது முயற்சி எடுப்பார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தனியார் துறையில் யாராவது இவ்வளவு பணம் போட்டு செலவு பண்ணும் பட்சத்தில், அரசாங்கத்திற்கு ஆட்சேபணை இருக்காது.

திரு. சா. கணேசன் : பாதாள சாக்கடை இல்லாததினால் அதிகப்படியான நோய்கள் வருவதும், அதனால் கொசு உற்பத்தியாவதும், ஆன இத்யாதி துன்பங்கள் இருக்கின்றன என்பதை உணர்ந்து, சுகாதாரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று எண்ணுகின்ற அரசாங்கம், பெரிய நகரங்களில்தான் இந்தக் கஷ்டங்கள் இருக்கின்றன, ஆகவே எல்லா நகரங்களிலும் எளிதாக மூடு சாக்கடைத் திட்டம் போடுவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பாதாள சாக்கடை இல்லாததன் காரணமாக பல வியாதிகள் ஏற்படுகின்றன என்பதை உணர்ந்திருக்கிற அரசாங்கம், பாதாள சாக்கடை திட்டம் எங்கெல்லாம் ஆரம்பித்துச் செய்ய முடியுமோ, ஆங்காங்கு எங்கு முக்கியமாகச் செய்ய வேண்டுமோ அங்கெல்லாம் ஓரளவுக்கு செய்துகொண்டுதான் வருகிறது.

திரு. சா. கணேசன் : தெருக்களின் நடுவிலே போகிற மெயின் குழாய்களை அரசாங்கம் போட்டுவிட்டால், வீடுகளிலிருந்து கழிவு நீர் வரும் இடங்களுக்கு அந்த வீட்டுக்காரர்கள் தங்கள் சொந்த செலவில் குழாய்கள் போட்டுக்கொள்வதாக ஏற்றுக்கொண்டு பெடிஷன்கள் போட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின்படி செய்தால், மிக சொற்பமான செலவில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம். இதுபற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அது பற்றியும் அரசாங்கம் ஆலோசிக்கும்.

20th January 1964]

திருமதி டி. என். அனந்தநாயகி : மேல்நாடுகளில் செய்வது போல், டிரையினேஜ் ஸிஸ்டத்தை நிறைவேற்ற தனியார் துறையை அழைத்து, அவர்கள் முன் வந்தால், அவர்களுக்கு அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அதிகாரத்தைக் கொடுத்து, மின்சாரத்தை தனியார் துறைக்கு கொடுப்பதுபோல் கொடுத்து, அவர்களுக்கு வேண்டிய உதவியை அரசாங்கம் செய்யுமா ?

(There was noise in the House.)

MR. SPEAKER : Let the hon. Members keep silent. If any hon. Member wants to speak, let him go out and speak. I request the hon. Member to repeat the question.

திருமதி டி. என். அனந்தநாயகி : மேல்நாடுகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தை தனியார் துறைகளில் விட்டு, அதன் மூலம் அந்தத் திட்டம் துரிதமாக நிறைவேறுவதற்கு வழிசெய்கிறார்கள். தம் நாட்டில் மின்சாரத்தை தனியார் துறைக்கு கொடுத்திருக்கிறோம். எப்பொழுது தேவையோ அப்பொழுது அதை தேசியமயமாக்கிக்கொள்ளலாம். ஆகவே பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தவரையில் தனியார் துறையை அழைத்து, அவர்கள் அந்தத் திட்டத்தை எடுத்து நிறைவேற்றுவதற்கு முன்வருவார்களேயானால், அவர்களுக்கு உதவி செய்வதற்கு அரசாங்கம் முன் வருவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மேல் நாடுகளில் இருப்பதுபோல அவ்வளவு பண வசதி படைத்தவர்கள் நம்முடைய நாட்டில் இல்லை. அப்படி வருவார்களேயானால், அதை வரவேற்பதில் அரசாங்கத்திற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்காது.

திரு. கரு. சீமைச்சாமி : அம்மையார் அவர்கள் சொல்லுகிற பொழுது, முதலிலே தனியார் துறையிலே வேலை செய்துவிட்டு, பின்னர் தேசியமயமாக்கி விடலாம் என்று சொன்னார்கள். இப்படி சொன்னால் யாராவது எடுத்துச் செய்ய முன்வருவார்களா? (சிரிப்பு).

(பதில் இல்லை.)

திரு. து. ப. அழகமுத்து : திருச்சி நகரத்திற்கான பாதாள சாக்கடைத் திட்டம் சம்பந்தமாக இன்வெஸ்டிகேஷன் முடிந்து விட்டது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும் என்பதை அறியலாமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : முதல் ஸ்டேஜ் ஆரம்பிப்பதற்கு ஏற்கெனவே சாங்ஷன் ஆகிவிட்டது.

புலவர் கா. கோவிந்தன் : நம் நாட்டில் யானைக்கால் நோய், மலேரியா நோய் நடைமுறையில் இருந்து வருகின்றதற்குக் காரணம், பல இடங்களில் கழி நீர்க் கால்வாய் திட்டம் இல்லாமல் இருப்பதுதான். குடி தண்ணீர் திட்டம் இருக்கிற இடங்களிலாவது கழிவு நீர்த் திட்டம் அமைக்க சர்க்கார் முயலுமா ? பஞ்சாயத்

[20th January 1964

துகள் இத் திட்டத்திற்காக உதவி கேட்டால், மானியமாகவோ, அல்லது பாதிக் கடனாகவும், பாதி மானியமாகவும் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஏற்கெனவே கூறியபடி, எங்கெங்கே அவசியமோ, அங்கெல்லாம் சாங்ஷன் செய்து கொண்டு வருகிறோம். பாதி மானியம் கொடுப்பதைப் பற்றி கனம் அங்கத்தினர் குறிப்பாகக் கூறினால், அது பரிசீலிக்கப்படும்.

திரு. அ. தியாகராஜன்: எங்கே அவசியமாக இருக்கிறதோ, அங்கே இந்தப் பாதாள சாக்கடை திட்டம் ஏற்படுத்தப்படுமென்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். திருச்சி மாவட்டத்தில் புதுக்கோட்டையில், பாதிப் பகுதியில் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. பாதிப் பகுதியில் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. இது குறித்து அங்கேயுள்ள சேர்மன் அவர்களும் டெபுடேஷன் வந்து அரசாங்கத்திடம் கடன் கேட்டார்கள். அரசாங்கம் அதை நிராகரித்தது. இப்பொழுது ஏ-கிரேடு முனிசிபாலிடி ஆக்கப்பட்டதன் காரணமாக, இந்தத் திட்டத்தை சாங்ஷன் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு: சேலம் நகரத்தில் பாதாள சாக்கடை அமைக்க உதவி கோரி நகரசபையாரிடமிருந்து மனுக்கள் வந்திருக்கின்றனவா? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

MR. SPEAKER: The Hon. Minister cannot have all details about all municipalities here and now.

Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II—POINT OF ORDER—NON-UTILIZATION OF ONE FULL HOUR FOR QUESTIONS.

திரு. செ. மாதவன்: கனம் தலைவர் அவர்களே, ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், நமது சட்டசபை விதிகள் 22-வது விதியின்படி ஒரு மணி நேரம் கேள்வி நேரமாக இருக்க வேண்டும். இன்று கேள்வித் தாளில் கொடுக்கப்பட்ட கேள்விகளே குறைவு. அதிலும் 6 கேள்விகள்தான் பதிலளிக்கப் பட்டிருக்கின்றன. இதை அதிகப்படுத்த முடியாமைக்குக் காரணம், பெரும்பான்மையான கேள்விகளுக்கு அரசாங்க இலாகாக்கள் பதில் அனுப்ப முடியாமல் இருப்பதுதான். ஆகவே இதை ஒழுங்குப் பிரச்னையாக எடுத்துக் கொண்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் பதில்கள் வருவதற்கும்,